1973 டிசம்பர் 1] [திரு. ரா. ரா. முனுசாமி]

பறந்துவிடுகின்றன. திரும்பவும் வந்து பயிரை நாசம் செய்கின்றன. அதனால் அந்த ஒன்றியத்திலுள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். அப்போப்பட்ட நிலையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கும், அந்த பூச்சி அழிவதற்கு ஏற்ற மருந்தைக் கொண்டு வந்து தெளிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல விவசாயி என்ற காரணத்தினால்தான் அவர்களுடைய ப்ளாக்கைப் பற்றி ஏறத்தாழ ஒரு பக்கம் இந்த ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் குறிப்பிட்ட பூச்சி "paddy head ear bug" என்று சொல்லப்படுகிறது. அதை அழிப்பதற்கு 20 டன் டி.டி.டி. மருந்தும், 30 டன் பி.எச்.சி. மருந்தும் கொடுத்திருக்கிறோம். பி.எச்.சி. மருந்து அடித்தவுடன் நிச்சயமாக பூச்சிகள் அழிந்துவிடும்.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை' பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

'1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் சில சிறு திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. இதிலே 68-எச் என்ற செக்‌ஷன் சட்டமன்றத்தின் மூலம் ஏற்கனவே திருத்தமாகக் கொண்டுவரப் பட்டு இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தின் மூலம் வேறு ஒரு சட்டத் திருத்தம் 68-எச் என்று கொண்டுவந்து விட்ட காரணத்தினால் நம்முடைய திருத்தச் சட்டத்தை 68-எச் எச். என்று மாற்ற இந்த மசோதா வகை செய்கிறது.

(திரு. க. சுப்பு தலைமை.)

எஸ்.டி.ஏ.டி.-இல் இருந்து வழித்தடங்களில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அப்படி அப்பீல் செய்ய கட்டணத்தை விதிக்கின்ற திருத்தமும் இருக் கிறது. இவை இரண்டும் சாதாரண திருத்தங்கள் என்ற வகை யில் இவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

* 22—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.